



விக்கிரவாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் தலைமையில் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி முன்னிலையில். விக்கிரவாண்டி தேர்தல் பணிமனையிலிருந்து இந்தியா கூட்டணி தோழர்களுடன் ஊர்வலமாகச் சென்று விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்தார். அமைச்சர்கள் சி.வெ.கணேசன், செஞ்சி கே.எஸ்.மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் துரை.ரவிகுமார், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், தோழமைக்கட்சி நிர்வாகிகள் கம்யூனிஸ்ட் கட்சி ஏ.வி.சரவணன், வழக்கறிஞர் ராமமூர்த்தி, காங்கிரஸ் ஆர்.பி.ரமேஷ், விசிக தேர்தல் மேலிடப் பொறுப்பாளர் குணவழகன் மாவட்டச் செயலாளர்கள் திலிபன், பெரியார், முஸ்லிம் லீக் அமீர் அப்பாஸ், மனித நேய மக்கள் கட்சி முஸ்தாக்தீன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக இந்தியா கூட்டணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர்

# ராகுல் காந்தி பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, ஜூன் 21-

காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர் ராகுல் காந்தி எம்.பி. பிறந்த நாளையொட்டி தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ராகுல் காந்தி அவர்கள் பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**அன்புச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!**

**நம் நாட்டு மக்களின் மீதான தங்களின் ஈடுபாடு உங்களை மிகப் பெரும் உயரங்களுக்கு இட்டுச் செல்லும். வரும் ஆண்டு தங்களுக்குத் தொடர்ந்து முன்னேற்றத்தோடும் வெற்றி யோடும் திகழ வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு கழகத்தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### விக்கிரவாண்டி கழக எம்.எல்.ஏ. நா.புகழேந்தி மறைவு!

# "அனைத்துத் தரப்பினரிடமும் நட்புணர்வோடு பழகி - அனைவரின் நன்மதிப்பையும் பெற்றவர்!"

## தமிழ்நாடு சட்டப்பேரவையில் இரங்கல் தீர்மானம்!

**சென்னை, ஜூன் 21-**

**விக்கிரவாண்டி தொகுதி, கழக சட்டமன்ற உறுப்பினர் கோலியனூர் நா.புகழேந்தி அவர்களின் மறைவுக்கு, தமிழ்நாடு சட்டப் பேரவையில் இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**அது தொடர்பாக, பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் படித்த இரங்கல் குறிப்பில், "கட்சிப் பாகுபாடின்றி அனைத்துத் தரப்பினரிடமும் நட்புணர்வோடு பழகி அனைவரது நன்மதிப்பையும் பெற்றவராக விளங்கியவர் புகழேந்தி!" எனப் புகழாரம் சூட்டினார்.**

பேரவைத் தலைவர் அவர்கள் படித்த இரங்கல் குறிப்பு வருமாறு:-



**2021-ஆம் ஆண்டு விக்கிரவாண்டி தொகுதியிலிருந்து பதினாறாவது சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றிய நா. புகழேந்தி அவர்கள், 6.4.2024 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.**

**இனிய பண்பும், எளிமையும் தன்னகத்தே கொண்டவரான நா. புகழேந்தி அவர்கள், கட்சிப் பாகுபாடின்றி அனைத்துத் தரப்பினரிடமும் நட்புணர்வோடு பழகி அனைவரது நன்மதிப்பையும் பெற்றவர்.**

**அரசின் திட்டங்களை தனது தொகுதி மக்களுக்குக் கொண்டு செல்வதில் மிகுந்த அக்கறை காட்டியவர். சமூகத் தொண்டாற்றுவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்.**

**அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.**

**இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."**

இவ்வாறு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காத்தனர்.

### "சமூகத்தைப் பாழ்படுத்தும் குற்றங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க முதல்வர் நடவடிக்கை!" - பேரவைத் தலைவர்!

# கள்ளக்குறிச்சியில் சாராயம் அருந்தி உயிரிழப்பு: சட்டப் பேரவையில் இரங்கல்!

## உறுப்பினர்கள் எழுந்து நின்று அமைதி காத்து மவுன அஞ்சலி!

சென்னை, ஜூன் 21-

சட்டப் பேரவையில் நேற்று, கள்ளக்குறிச்சியில் சாராயம் அருந்தி உயிரிழப்புகள் ஏற்பட்டதற்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இரசாயனம் கலந்த சாராயம் அருந்தி உயிரிழந்தவர்கள் குறித்து சட்டப்பேரவையில் நேற்று பேரவைத் தலைவர் அவர்கள் படித்த குறிப்பு வருமாறு:-

"கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இரசாயனம் கலந்த சாராயம் அருந்தியதன் காரணமாக 30-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

சமூகத்தைப் பாழ்படுத்தும் இத்தகைய குற்றங்கள் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்படுகின்ற வகையில் கடுமையான நடவடிக்கை எடுக்கவும், இத்தகைய நிகழ்வில் பாதிக்கப்பட்ட நபர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை உடனடியாகச் செய்வதற்கும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்நிகழ்வில் உயிரிழந்தவர்களை இழந்துவாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், இத்துயரச் சம்பவங்களில் மறைந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகை யிலும் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்".

இவ்வாறு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைத் தொடர்ந்து, உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காத்தனர்.

### விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல்

# கழக வேட்பாளர் அன்னியூர் சிவா வேட்பு மனுத் தாக்கல்!

## அமைச்சர் க.பொன்முடி – எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. – பொன்.கௌதமசிகாமணி – அமைச்சர்கள் – 'இந்தியா' கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்பு!

விக்கிரவாண்டி, ஜூன் 21-

விக்கிரவாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் தலைமையில் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி முன்னிலையில், விக்கிரவாண்டி தேர்தல் பணிமனையிலிருந்து இந்தியா கூட்டணி தோழர்களுடன் ஊர்வலமாகச் சென்று விக்கிர வாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

விக்கிரவாண்டி சட்டசபை தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த நா.புகழேந்தி, கடந்த ஏப்ரல் மாதம் 6 ஆம் தேதி திடீர் உடல்நலக் குறைவால் காலமானார். இதனால் விக்கிரவாண்டி சட்டசபை தொகுதி காலியான தாக அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து விக்கிரவாண்டி சட்டசபை தொகுதிக்கான இடைத்தேர்தல் அறிவிப்பு ஜூன் 10 ஆம் தேதி இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டது.

விக்கிரவாண்டி சட்டசபை தொகுதியில் ஜூலை 10 ஆம் தேதி இடைத் தேர்தல் நடைபெற உள்ளது. விக்கிரவாண்டி தொகுதி சட்டசபை தேர்தல் ஜூலை 10ல் நடைபெறும் நிலையில் கடந்த ஜூன் 14 முதல் வேட்பு மனுத் தாக்கல் தொடங்கியது. விக்கிர வாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனுக்களை வேட்பாளர்கள் தாக்கல் செய்து வருகின்றனர்.

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளராக கழக விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா போட்டியிடுவார் என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

இந்நிலையில் விக்கிரவாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் தலைமையில் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி முன்னிலையில். விக்கிர வாண்டி தேர்தல் பணிமனையிலிருந்து இந்தியா கூட்டணி தோழர்களுடன் ஊர்வலமாகச் சென்று விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

இதில் அமைச்சர்கள் சி.வெ. கணேசன், செஞ்சி கே.எஸ். மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் துரை.ரவிகுமார், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், தோழமைக்கட்சி நிர்வாகிகள் கம்யூனிஸ்ட் கட்சி ஏ.வி.சரவணன், வழக்கறிஞர் ராமமூர்த்தி, காங்கிரஸ் ஆர்.பி.ரமேஷ், விசிக தேர்தல் மேலிடப் பொறுப்பாளர் குணவழகன் மாவட்டச் செயலாளர்கள் திலிபன், பெரியார், முஸ்லிம் லீக் அமீர் அப்பாஸ், மனித நேய மக்கள் கட்சி முஸ்தாக்தீன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக இந்தியா கூட்டணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### சமூக நீதிக்கு எதிரான, குளறுபடிகள் நிறைந்த, ஒரு மோசடித் தேர்வான

# 'நீட்' தேர்வை ரத்து செய்ய மறுக்கும் பா.ஜ.க. அரசுக்கு எதிராக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## கழக மாணவர் அணி சார்பில் வருகிற 24ஆம் தேதி நடைபெறுகிறது என அணியின் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 21 -**

**நீட் தேர்வு என்பதே மோசடி தான் என்றும், ஆரம்பம் முதலே நீட் தேர்வை எதிர்த்த ஒரே இயக்கம் தி.மு.கழகம் தான் எனவும், சமூகநீதிக்கு எதிரான, குளறுபடிகள் நிறைந்த நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் பாசிச பா.ஜ.க. அரசுக்கு கடும் கண்டனங்கள் தெரிவிப்பதுடன் கழகத் தலைவரின் ஆணை யேற்று தி.மு.க. மாணவர் அணி சார்பில், சென்னை வள்ளுவர் கோட்டத்தில், வரும் 24ஆம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

நீட் தேர்வு என்பது ஏழை-எளிய மாணவர்களை தகுதி என்ற பெயரில் மருத்துவக் கல்வி பயிலவிடாமல் ஓரங்கட்ட பாசிச பா.ஜ.க. அரசால் கொண்டுவரப்பட்ட தேர்வு. சமூகநீதிக்கு எதிரான தேர்வு முறை - சமத்துவம் இல்லாத தேர்வு முறை கிராமப்புற மாணவர்களுக்கு வாய்ப்பை மறுக்கக்கூடிய தேர்வு முறை - அவர்களது கல்வி உரிமைக்கு தடை போடும் தேர்வு முறை அவர்களது மருத்துவக் கனவைச் சிதைத்து, "நீ டாக்டர் ஆக முடியாது" என்றும், "உனக்குத் தகுதியில்லை" என்றும் கூறி, தடுப்புச் சுவர் எழுப்புகிறது.

மேலும், நீட் தேர்வு என்பதே ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தில் படித்த மாணவர்களுக்கு சாதகமாகவும், வசதி படைத்தோருக்கும் மட்டுமே பயனடையும் வகையில் உருவாக்கப்பட்ட தேர்வு முறை. ஆள்மாறாட்டம் செய்வது - வினாத் தாள்களை திருடுவது - விடைத்தாள்களை மாற்றி வைப்பது - மதிப்பெண்கள் வழங்குவதில் குளறுபிடிகள் என்று இத்தேர்வே முழுமையான மோசடியாக உள்ளது. இதனை முன்பே அறிந்ததால் தான் தி.மு.க. நீட் தேர்வை ஆரம்பம் முதல் எதிர்த்து வருகிறது.

**'நீட்' தேர்வு அன்றே வினாத்தாள் கசிந்துள்ளது!**

இந்த ஆண்டு, இளங்கலை மருத்துவ மாணவர்களுக்கான நுழைவுத் தேர்வான நீட் தேர்வை தேசிய தேர்வு முகமை, கடந்த மே 5ஆம் தேதி நடத்தியது. நாடு முழுவதும் 4,750 மையங்களில் இந்த தேர்வு நடத்தப்பட்டது. இதில் 24 லட்சம் மாணவர்கள் தேர்வு எழுதினர். இதன் முடிவுகள் ஜூன் 14ம் தேதி வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில், ஜூன் 4ம் தேதியே முடிவுகள் வெளியாகின.

இந்த ஆண்டு நீட் தேர்வு நடைபெற்ற அன்றே வினாத்தாள் கசிந்ததாக பல்வேறு புகார்கள் எழுந்தன. இது ஒன்றும் புதிதல்ல. கடந்த 2019ஆம் ஆண்டு நடந்த தேர்வில் முறைகேடு செய்ததாக 4 பேர் கைது செய்யப்பட்டார்கள். 2020ஆம் ஆண்டு நடந்த தேர்வில் முறைகேடு செய்ததாக 5 பேர் கைது செய்யப்பட்டார்கள். 2021ஆம் ஆண்டு தேர்வில் 15 பேர் முறைகேடு செய்ததாக கைது செய்யப்பட்டார்கள்.

நீட் தேர்வு என்பது, இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல் என்று நான்கு பாடப் பிரிவுகளில் இருந்து 45 கேள்விகள் வீதம் 180 கேள்விகள் கேட்கப்படும். ஒவ்வொரு கேள்விக்கும் 4 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 720 மதிப்பெண்கள் கிடைக்கும். ஒரு கேள்விக்கு தவறாக பதில் அளித்தால் ஒரு மதிப்பெண் குறைக்கப்படும். ஒரு கேள்விக்கு பதில் அளிக்காமல் விட்டிருந்தால் 716 மதிப்பெண்கள் கிடைக்கும். ஒரு கேள்விக்கு மட்டும் தவறாக பதில் அளித்திருந்தால் அவருக்கு 179 கேள்விகளுக்கான 716 மதிப்பெண்களில் ஒரு மதிப்பெண் குறைக்கப்பட்டு 715 மதிப்பெண்கள் பெறலாம். இப்படி இருக்கு, சில மாணவர்கள் 719 மற்றும் 718 மதிப்பெண்ணும் பெற்றிருந்தனர். நீட் தேர்வு மதிப்பீட்டு முறைப்படி இந்த மதிப்பெண்களை எந்த மாணவரும் பெறவே முடியாது. எனவே இந்த தேர்வில், ஒருவர் பெறு வதற்கு சாத்தியமில்லாத மதிப்பெண்களை சில மாணவர்கள் பெற்றிருந்தது பலருக்கு சந்தேகத்தை எழுப்பியது.

**குளறுபடிகளின் உச்சம் 'நீட்' தேர்வு!**

இதற்கு முன்பு கடந்த 8 ஆண்டுகளில் மொத்தமாக 7 பேர் மட்டுமே முழு மதிப்பெண் பெற்ற நிலையில், இந்த ஆண்டு 67 மாணவர்கள் முழு மதிப்பெண்ணான 720 மதிப்பெண் பெற்றுள்ளனர். அதிலும், ஹரியானா வின் ஃபரிதாபாத்தில் உள்ள ஒரு மையத்தில் தேர்வு எழுதியவர்களில் 6 பேர் முழு மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். இதற்கெல்லாம் மேலாக 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறாதவர்கள் கூட, நீட் தேர்வில் 700க்கும் அதிகமான மதிப்பெண்களை பெற்றிருப்பது நீட் தேர்வு என்பது குளறுபடிகளின் உச்சமாக இருப்பதை வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

இவ்வளவு மாணவர்கள் முதலிடம் பிடித்தது, எவ்வாறு சாத்தியமாகும் என்றால், வினாத்தாள் தேர்வுக்கு முன்பே வெளி வருவது, பணம் பெற்றுக் கொண்டு விடைகளை பகிர்வது, ஆள் மாறாட்டம் செய்து தேர்வு எழுதுவது என பல்வேறு முறை கேடுகள் நடைபெற்றதற்கான ஆதாரங்கள் இத்தேர்வு முறையே மோசடி என்று உறுதி செய்கிறது. மேலும், நீட் தேர்வில் முறைகேடுகள் நடந்தது உண்மை என்று ஒன்றிய கல்வித் துறை அமைச்சரே ஒப்புக் கொண்டுள்ளார்.

ஏற்கனவே குறிப்பிட்ட ஹரியானாவில் ஒரு தேர்வு மையத்தில் தேர்வு எழுதிய 6 மாணவர்கள், என்.சி.இ.ஆர்.டி.,யின் முந்தைய பாடத் திட்டத்தில் விடை எழுதுவதா, புதிய பாடத் திட்டத்தில் விடை எழுதுவதா என்று சந்தேகம் ஏற்பட்டதால் அனைத்து கேள்விகளுக்கும் விடையளிக்க முடியவில்லை என கூறி, காலத்தாமதம் ஏற்பட்டதாகவும், இழந்த நேரத்துக்காக, கருணை மதிப்பெண் வழங்கக் கோரி உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தனர். உடனே, தேசிய தேர்வு முகமை தானாக முன்வந்து அந்த தேர்வு மையத்தையும் சேர்த்து அருகிலிருந்த தேர்வு மையங்களில் தேர்வு எழுதியவர்களுக்கும் சேர்ந்து 1563 மாணவர்களுக்கு கருணை மதிப்பெண் வழங்கப்படும் என கூறி வழக்கு முடிக்கப்பட்டது. இதனால் மட்டுமே முழு மதிப்பெண்கள் பெற்ற 67 மாணவர்களில், 50 பேர் கருணை மதிப்பெண் அடிப்படையில் முதலிடம் பெற்றுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பிரச்சினை பலருக்கும் ஏற்பட்டிருந்தாலும், அனைவரும் நீதிமன்றத்தை நாடியிருக்க மாட்டார்கள், புகார் அளித்தி ருக்க மாட்டார்கள். மிகப் பெரிய விதி மீறல் நடந்துள்ளது. இதனால், தேர்வு எழுதிய 24 லட்சம் மாணவர்களுக்கு பெரும் மன உளைச்சலை இத்தேர்வு முறை ஏற்படுத்தியுள்ளது.

**தேர்வு முறைகேட்டில் கையும் களவுமாக சிக்கியவர்!**

குஜராத் மாநிலம், பன்ச்மகால் மாவட்டம், கோத்ராவில் உள்ள தேர்வு மையத்தில் நடந்த நீட் தேர்வில் பெரிய முறைகேடு நடந்த நாடறிந்ததே. அதாவது, தேர்வு மையத்தில் ஜெய் ஜலராம் பகுதியில் உள்ள பள்ளியைச் சேர்ந்த இயற்பியல் ஆசிரியர் துஷார் பட் என்பவர், தேர்வு மையத்தின் துணை சூப்பிரண்டாக இருந்துள்ளார். அவர், பணியில் உள்ள தேர்வு மையத்தில் நீட் தேர்வு எழுதிய மாணவர்களிடம், "நீட் தேர்வில் விடை தெரியாவிட்டால் அதனை எழுதாமல் விட்டு விட சொல்லியும், தேர்வு முடிந்த பிறகு சரியான விடைகளை அவரவர் விடைத்தாளில் எழுதி தரப்படும்" எனக்கூறி ரூ.10 கோடி அளவிற்கு பேரம் பேசி 16 மாணவர்களின் தேர்வு எண் மற்றும் அவர்களது பெயர் கொண்ட விவரத்தை செல்போனில் வைத்துள்ளார். இந்த சம்பவம் குறித்து வெளியே செய்தி வரவே அவர் மாட்டிக் கொண்டார். ஆனால், இதில் சந்தேகம் எழுப்புவது என்னவென்றால், முறைகேடு நடைபெற்ற ஒரு இடத்தில் மட்டும் கையும் களவுமாக மாட்டிக் கொண்டார். ஆனால், எத்தனை இடங்களில் மறைமுகமாக முறைகேடு நடைபெற்றுள்ளது என்பது யாருக்கு தெரியும்?

நீட் தேர்வு என்பதே சமூகநீதி, சமத்துவம், சமவாய்ப்பு, ஏழை எளிய மாணவர்களுக்கு பாதிப்பு மற்றும் மாநில உரிமை பறிப்பு போன்ற காரணங்களுக்காக தான் ஆரம்ப நாள் முதலே கழகத் தலைவர் - தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிகவும் அழுத்தம் திருத்தமாக நீட் தேர்வை எதிர்த்து வருகிறார். அவரது ஆணைக்கிணங்க, கழக மாணவர் அணி 2017 முதல் பல்வேறு தொடர் போராட்டங்களையும், தமிழ்நாட்டிலுள்ள அத்தனை முற்போக்கு சிந்தனையுள்ள மாணவர் அமைப்புகளை ஒன்றிணைத்து, தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு மூலம் பல்வேறு விவாதங்கள், கருத்தரங்கம், ஆர்ப்பாட்டம், போராட்டங்கள் என அனைத்து அறப்போராட்டங்களையும் கழக மாணவர் அணி முன்னெடுத்து நடத்தி உள்ளது.

கழக இளைஞர் அணிச் செயலாளராக பொறுப்பேற்ற நாள் முதலே இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்த நீட் தேர்வை எதிர்த்தும், அதனை தமிழ்நாட்டிலிருந்து நீக்கி, தமிழ்நாட்டு மாணவர்களின் உரிமைகளையும், அவர்கள் இழக்கும் வாய்ப்பை பெற்றுத் தரவும் போராடி வருகிறார். அவரது வழிகாட்டுதலோடு, கழக இளைஞர் அணியுடன் மாணவர் அணியும் இணைந்து மாபெரும் கையெழுத்து இயக்கம் மற்றும் உண்ணாநிலை போராட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களை நடத்தி உள்ளது.

**'நீட்' தேர்வை எதிர்த்து போராடும் உதயநிதி ஸ்டாலின்!**

கழக ஆட்சி அமைந்த உடன், மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில் உயர்மட்ட குழு அமைத்து, நீட் தேர்வினால் ஏற்படும் தாக்கங்களை அறிவியல்பூர்வமாக ஆய்வு செய்தது தி.மு.க. அந்த குழுவின் பரிந்துரையின்படி, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்கக் கோரும் மசோதா, கடந்த 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் தரப்பிலிருந்து பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகு, மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டு, தற்போது வரை காத்திருப்பில் உள்ளது.

**இந்தியா முழுதும் 'நீட்' தேர்வுக்கு எதிர்ப்பு!**

ஒன்றிய பா.ஜ.க. அரசு நீட் தேர்வினை 2017-இல் கொண்டு வந்தது முதல் தி.மு.க. கடுமையாக எதிர்த்து வந்தது. தமிழ்நாட்டிலுள்ள முற்போக்கு சிந்தனை கொண்ட அத்தனை அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் நீட் தேர்வை கடுமையாக எதிர்த்து வந்தது. அப்போதெல்லாம் பாசிச பா.ஜ.க. அரசு தி.மு.க. மட்டும் தான் நீட் தேர்வை எதிர்கிறது என்றும்; தமிழ்நாடு மட்டும் தான் நீட் தேர்வை வேண்டாம் என்று சொல்கிறது என்றும் விமர்சித்து வந்தது. தி.மு.க.வின் போராட்டங்களை விளம்பர அரசியல் என்றெல்லாம் சொல்லி குற்றம் சாட்டியது. அதற்கு பதிலடி தரும் வகையில், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு தான் சமூகநீதியின் தொட்டில்! சமவாய்ப்பு, சமூகநீதி, சமத்துவம் ஆகியவற்றிற்கு எதிரான நீட் தேர்வை இந்தியாவில் தமிழ்நாடு தான் முதலில் எதிர்க்கும் என்பதில் எந்த ஐயமில்லை என்று தெரிவித்து, என்றைக்கும் நீட் தேர்வை எதிர்த்தே தீர வேண்டுமென்று சென்னார். ஆனால், இன்று நீட் தேர்வில் உள்ள மோசடிகள் மற்றும் குளறுபடிகளை உணர்ந்த பா.ஜ.க.வை சேராத அரசியல் கட்சிகள், பிற மாநில அரசுகள், ஏன் ஒட்டுமொத் இந்தியா முழுவதுமுள்ள பல்வேறு கல்வியாளர்களும், பெற்றோர்களும், மாணவர்களும் நீட் தேர்வை கடுமையாக எதிர்க்க தொடங்கி விட்டனர். நீட் தேர்விற்கு எதிராக தமிழ்நாட்டில் தொடங்கிய அதிர்வலைகள் இன்று இந்தியா முழுவதும் பரவியிருப்பதை காண முடிகிறது.

**நீட் தேர்வே ஒரு மோசடி என கழகத் தலைவர் எதிர்த்து வருகிறார்!**

நீட் தேர்வில் நடைபெற்ற மோசடிகளால் இந்தியா முழுவதும் எதிர்ப்பலை கிளம்பியுள்ளது. நீட் தேர்வு என்பதே பெரும் மோசடி என்பதைத் தான் கழகத் தலைவர் அவர்கள் வலியுறுத்தி அதனை கடுமையாக எதிர்த்து வருகிறார்.

நீட் தேர்வே தமிழ்நாட்டிற்கு தேவையில்லை என்பதற்காக நிறைவேற்றி அனுப்பியிருக்கும் சட்ட மசோதாவிற்கு உடனடியாக ஒப்புதல் தர வேண்டு மென்றும், நீட் தேர்வில் நடைபெற்றுள்ள மிகப் பெரிய மோசடிகளை, குளறுபடிகளை களைவதற்கு மேல்நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், நீட் எத்தனை மரணங்கள் நிகழ்ந்தாலும், நீட் தேர்வை நடத்தியே தீருவேன் என்ற எதேச்சதிகாரப் போக்கினை கடை பிடிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து கழக மாணவர் அணிச் சார்பில் வரும், 24.6.2024 அன்று காலை 9.00 மணியளவில், சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

**கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாணவர் அணியினர் திரண்டிடுவீர்!**

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர் அமைப்பின் நிர்வாகிகள் அவர்களது தோழர்களுடன் பெருந்திரளாக பங்கேற்று, போராட்டத்தை வெற்றியடையச் செய்ய அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.